# சட்டையை விற்றாவது புத்தகங்களை வாங்கு

ஆர். பாலா

REFORMED PUBLICATIONS
சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**சட்டையை விற்றாவது புத்தகங்களை வாங்கு**

*ஆர். பாலா*

*பதிப்புரிமை © சீர்திருத்த வெளியீடுகள்*

*முதல் பதிப்பு: ஜனவரி 2016*

*கிடைக்குமிடம்:*

**சீர்திருத்த வெளியீடுகள்**
*6/87 காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை 600023.*
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைபேசி: 9445671113*
*ஈமெயில்:* rpchennai23@gmail.com

கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த
மேலதிக தகவல்களுக்கு www.biblelamp.org
வலைப்பூவைப் பார்க்கவும்.

# பொருளடக்கம்


இன்றியமையாத வாசிப்பு ....................5

வாசித்து வளர்ந்தவர்கள் .................... 18

எதை, எப்படி வாசிப்பது? ....................28

நானும் என் வாசிப்பும் ....................53

படித்ததில் பிடித்தவை ....................67

1. மீட்பு: நிறைவேற்றமும், நடைமுறைப்படுத்தலும் ....................69
2. சுவிசேஷமும் கர்த்தரின் இறையாண்மையும் ....................73
3. பரிசுத்தம் ....................77
4. கிறிஸ்தவனின் தனித்துவமான குணாதிசயங்கள் ....................84
5. தாம்பத்திய உறவில் நெருக்கம் ....................90
6. அழிவில்லா ஆத்மீக ஆலோசனைகள் ....................97
7. கிறிஸ்தவ திருச்சபை வரலாறு .................... 103

# இன்றியமையாத வாசிப்பு

*வாசிப்பு சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாதது. வாசிக்காதவர்களால் சிந்திக்கவும், வளரவும் முடியாது. கல்லூரிப்படிப்பு இல்லாமல் சமுதாயத்தில் உயர்ந்தவர்களைப்பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால், வாசிப்பில்லாமல் வாழ்க்கையில் உயர்ந்தவர்களைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க முடியாது. வளர்ச்சி என்பது வெறும் பொருளாதார, வாழ்க்கைத்தர வளர்ச்சி மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. வாசிப்பில்லாமல் வெறும் இணையத்தைச் சார்ந்தவைகளைக் கொண்டு மனிதர்கள் வளரவில்லையா என்று சிலர் கேட்கலாம். அது ஒரு துறையைச் சார்ந்த வளர்ச்சி மட்டுமே, அதுவே உண்மையான வளர்ச்சிக்கு அறிகுறி அல்ல.*

*வளர்ச்சி என்பது மனிதனின் அறிவு, மனோபாவம், சிந்தனை, விவேகம், ஒழுக்கம், நடத்தை என்பவற்றைச் சார்ந்தது. இவை மனிதனை மனிதனாக்குகிற விஷயங்கள். இவற்றின் வளர்ச்சியைப் பொறுத்தே மனிதனின் வளர்ச்சியைக் கணிப்பிட முடியும். இவற்றின் அடிப்படையிலேயே சமூக மாற்றங்களும் நிகழும். நல்ல சமூக மாற்றங்களுக்கு இந்த விஷயங்களில் மனிதனின் வளர்ச்சி முக்கியமானது. இந்த விஷயங்களில் மாற்றம் ஏற்பட மனிதனுக்கு மொழி அவசியமாகிறது. மொழியைப் புறக்கணிக்கும் சமுதாயம் உயர முடியாது. அதேநேரம் மொழியைத் தவறாகப் பயன்படுத்தும் சமுதாயமும் உயர முடியாது. மொழிவளர கல்வி அவசியம். மனிதனின் அடிப்படை சமுதாயத் தேவைகளில் ஒன்று கல்வி. அது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம்.*

*கல்வி மொழிக்கு எத்தனை அவசியமானதோ அந்தவிதத்தில் அது அரசியல் கலந்ததாக இருந்துவிடக்கூடாது. அரசியல் சார்பற்ற கல்வி அமைப்பு, சமூகம் உயர ஒவ்வொரு நாட்டுக்கும் தேவை. இதற்கு ஓர் உதாரணம் தருகிறேன். அறுபதுகளில் தி. மு. க. தமிழகத்தில் மொழி வெறியை ஏற்படுத்தியது. தி. மு. க. ஆட்சிக்கு வர அது வித்திட்டது. மக்கள் சுயமொழி வெறியால் வேற்று மொழி எதிர்ப்பாளர்களாக, அந்த மொழிகளைப் பின்பற்றும் மத எதிர்ப்பாளர்களாக மாறினார்கள். இந்தியும், ஆங்கிலமும், புறக்கணிக்கப்பட்டது. இந்து மதமும் புறக்கணிக்கப்பட்டு பகுத்தறிவுவாதம் தலைதூக்கியது. இதெல்லாம் எந்தவகையில் மொழிவளர்ச்சிக்குக் காரணமாக இருந்திருக்கின்றன என்று ஆராய்ந்தால் பெரியளவுக்கு மொழி வளர்ச்சி நிகழ்ந்திருப்பதாகக் கொள்ள முடியாது. உண்மையில் தமிழகம் புறக்கணித்திருக்கும் விஷயங்களால் அதற்கு ஏற்பட்ட பாதிப்புக்கள்தான் அதிகம் என்று சொல்லலாம். குறுகிய மாநிலப் பார்வைகொண்ட பரந்தநோக்கில்லாத சமூகப் பார்வையை தி. மு. க. உருவாக்கியது. அரசியல் நோக்கங்களுக்கு மொழிவெறி துணைபோயிருந்தாலும் உண்மையான சமூக வளர்ச்சிக்கு அது உதவவில்லை. அதனால்தான் அரசியல் கலப்பில்லாத நேர்மையான கல்வி மக்களுக்குத் தேவை என்கிறேன்.*

*சுயமொழிக் கல்வி என்பதிலெல்லாம் எனக்கு நாட்டமில்லை. மனிதனின் வளர்ச்சிக்குத் துணை செய்யும் கல்வியே தேவை. பல மொழிகளைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் கல்வி அளிக்க வேண்டும். சுயமொழிக் கல்வி குறுகிய மாநில, வட்டார மனப்பான்மையையே வளர்க்கும். மாநிலப் பாதுகாப்புக்கு அது அவசியம் என்று கருதுவது இன்றைய உலகில் கண்ணைக் கட்டிக்கொண்டு உலகம் தெரியவில்லை என்று சொல்வது போலாகும். இணைய உலகமும், அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவை ஏற்படுத்தியிருக்கும் பொருளாதார அணுகுமுறையும் குறுகிய மனப்பான்மைக்கு பேரெதிரியாக உருவாகிவிட்டிருக்கிறது. மனிதன் எங்கிருந்தாலும் உலகின் இன்னொரு பகுதியோடு தொடர்புகொள்ளவும், சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளவும் கூடியவனாக இன்று இருக்கிறான்.*

*கல்வியில் மொழிக்கு முதலிடம் அமைகிறது. எதைக் கற்றாலும் மொழியில்லாமல் கற்க முடியாது. மனிதனுக்கு வாசிக்கவும், எழுதவும் அடிப்படையில் தெரிந்திருக்க வேண்டும். அதை*

அளிப்பதே சிறந்த கல்வி. இந்த இடத்தில்தான் கீழைத்தேய நாடுகளின் கல்வி முறையில் பெருங்குறைபாடிருப்பதைப் பார்க்கிறோம். இந்நாடுகளில் கல்வி பொருளாதார மேன்மையை மட்டும் இலக்காகக் கொண்டதாக மாறி சிந்தனைபூர்வமான தேர்ந்த கல்வியைப் பெற்றுக்கொள்ளுவதற்கான அடிப்படை அம்சங்களைப் புறக்கணித்து வெறும் பட்டங்களை மட்டும் பெற்றுத்தரும் கல்வியாக மாறியிருக்கிறது. இதற்கு அரசியல் நிச்சயம் ஒரு பெருங்காரணம் என்பதை மறுக்கமுடியாது. இன்றைய கல்விமுறையின் கீழ் வளரும் பிள்ளைகளுக்கு வாசிப்பிலும், எழுத்திலும் தேர்ச்சியில்லை. பட்டப்படிப்பை ஆரம்பிப்பதற்கு முன் அவர்கள் வாசித்திருப்பதும் எழுதியிருப்பதும் மிகக் குறைவு. எழுத்துப் பிழையில்லாமல் சொந்த மொழியில் எழுதத் தெரியாமலும், வாசிப்புத் தேர்ச்சியில்லாமலும் பட்டப்படிப்பை ஆரம்பிப்பவர்களின் பட்டப்படிப்பு எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

எந்தக் கல்விமுறையும் கல்லூரிப் படிப்புக்கு முன் மாணவனை வாசிப்பதிலும், எழுதுவதிலும் தேர்ச்சியுள்ளவனாக்க வேண்டும். மேலை நாட்டுப் பாடசாலைகளில் இதற்கு முக்கியத்துவம் தருகிறார்கள். நம் சமுதாய மனப்பான்மை இதைப் புறக்கணித்து தேவையற்றதாக ஆக்கியிருக்கிறது. வீட்டில் பெற்றோர் இதற்கு பிள்ளைகளை அனுமதிப்பதில்லை. பாடப் புத்தகங்களைத் தவிர வேறு எதையும் வாசிப்பது பொழுதைப் போக்குகின்ற செயலாகக் கருதப்படுகின்றது. நல்ல மார்க்குப் பெற்றுத் தேரவேண்டும் என்ற வணிக நோக்குக் கொண்ட ஒரே உறுதியால் வாசிப்பதிலும், எழுதுவதிலும் பிள்ளைகளை ஆர்வமற்றவர்களாக்கியிருக்கிறார்கள். இது மாற வேண்டும். இந்த மாற்றமேற்பட முழு சமுதாயமும் இணைந்து இயங்க வேண்டும்.

ஓரளவுக்கு கல்வி பயின்றிருக்கும் சிலரிடம் வாசிப்புப் பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டபோது நான் அவதானித்திருக்கும் விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் பள்ளிவாழ்க்கையில் ஒரு நூலையாவது முழுமையாக வாசித்ததில்லை. அத்தகைய ஊக்கத்தைப் பள்ளியில் அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஒரு கட்டுரையாவது அவர்கள் எழுதியதில்லை. எப்படிக் கட்டுரை எழுத வேண்டும், அதற்கான விதிகள் என்ன என்பது பற்றிய ஆரம்ப விளக்கங்களைக்கூட எவரும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்திருக்கவில்லை. அதன்

*விளைவு என்ன? அவர்களுக்கு சாதாரணமாக புழக்கத்தில் இருக்கும் வார்த்தைகளுக்குக் கூட பொருள் தெரியவில்லை. தங்களுடைய குடும்பத்திலும், சுற்றுச் சூழலிலும், வட்டாரத்திலும் பேசக் கற்றிருக்கும் மொழிதவிர வேறு ஞானமில்லை. பொதுவாக தமிழில் பயன்படுத்தப்படும் பழமொழிகளும், உவமைகளும், மொழி அணிகலன்களும் அவர்களுக்குப் பரிச்சயமில்லாதவையாக இருந்தன. இலக்கியவாடை அறவே இல்லை. இதற்கெல்லாம் காரணம் எது? ஆரம்ப வாசிப்புப் பயிற்சியையும், எழுத்துப் பயிற்சியையும் அவர்கள் அடையமுடியாமல் போனதுதான்.*

*சமீபத்தில் கணையாழி இலக்கிய இதழின் பொன்விழாவை (50ம் ஆண்டு) நினைவுகூரும் கூட்டத்தில் முன்னால் இந்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் தலைமை உரையாற்றியிருந்தார். அவரது உரையை நான் வாசிக்க நேர்ந்தது. சிதம்பரத்துக்கு இலக்கியப் பரிச்சயம், இலக்கிய இதழ் தொடர்பிருந்தது அறிந்து ஆச்சரியப்பட்டேன். அதைவிட முக்கியம் அவர் தன் உரையில் குறிப்பிட்ட விஷயங்கள்தான். நிதர்சனமான சில உண்மைகளை இனங்காட்டிப் பேசியிருந்த அவர் அவற்றிற்கான தெளிவான தீர்வுகளையும் சுட்டிக்காட்டி விளக்கியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று எனக்குப்பட்டது. கணையாழி இதழை ஆரம்பித்தவர் கஸ்தூரி ரங்கன். அவர் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் பணியாற்றியிருக்கிறார். கணையாழி இலக்கிய இதழாகத்தான் இருந்திருக்கிறது. அதன் வாழ்க்கையில் இடையில் தோய்வு ஏற்பட்டு மறுபடியும் எழுந்து நடைபோட ஆரம்பித்தது. சிதம்பரம் தன் பேச்சில், ‘வந்திருக்கும் கூட்டம் எனக்கு சந்தோஷத்தை அளித்தபோதும் அது 150 ஆக இருப்பது மகிழ்ச்சி தரவில்லை’ என்றார். ஐயாயிரமோ பத்தாயிரமோ பேர் வந்திருக்க வேண்டிய கூட்டம் இது என்று குறிப்பிட்ட அவர் இன்றைக்கு சிறுகதைகள், நாவல்கள் 500 பிரதிகள் மட்டுமே போகிறதென்பது சமுதாய வளர்ச்சிக்கு அறிகுறியல்ல என்றார். கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலானோர் வயதானவர்களாக இருந்ததைக் குறிப்பிட்ட அவர் இளைஞர்களிடம் இலக்கியம் போய்ச்சேராமலிருப்பதற்கு காரணம் என்ன என்று கேட்டார். ‘ஆறே முக்கால் கோடி மக்கள் வாழும் தமிழகத்தில் ஐம்பது ஆண்டுகள் கடந்த ஓர் இதழ் அதிக பிரதிகள் விற்பனையாகவில்லை என்றால் எங்கோ கோளாறு இருக்கிறது நம் சமூகத்தில் என்று அர்த்தம்’ என்றார் சிதம்பரம். தழுவல் ஆங்கில இதழ்களும்,*

நூல்களும் நாட்டில் இலட்சக் கணக்கில் விற்கிறபோது தமிழில் இரண்டாயிரம் போவது தவிப்பாக இருக்கிறது என்பது மிகப் பெரிய கோளாறுக்கான அறிகுறி என்றார் அவர். இதை மட்டும் சொல்லி விட்டுவிடாமல் ஒரு முக்கிய காரணத்தை அவர் விளக்கினார். நாம் 'தமிழில் பேசுவதில்லை, தமிழில் எழுதுவதில்லை. பல தமிழ்க்குடும்பங்கள் தமிழுக்குப் பதிலாக ஆங்கிலத்தைத் தாய்மொழியாக ஏற்றுக்கொள்ளும் சூழல் வந்துகொண்டிருக்கிறது. தமிழில் பேசத் தயங்குகிறார்கள், கூச்சப்படுகிறார்கள்' என்றார்.

சிதம்பரத்தின் பேச்சில் பல உண்மைகள் இருந்தன. தமிழில் பேசுவதில்லை, எழுதுவதில்லை என்று குறிப்பிட்ட அவர் அதற்கான காரணத்தைச் சுட்டிக்காட்டவில்லை. ஆங்கில மோகம் மட்டும் அதற்குக் காரணமென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. கல்விநிலை அந்தளவுக்கு மோசமாக வாசிக்கவும், எழுதவும் மாணவர்களை ஊக்குவித்து வளரச் செய்யாமல் இருந்திருப்பதையும், இருந்து வருவதையும் அவர் அறியாமல் இருந்திருக்கிறாரா, அறிந்தும் அதைப்பற்றி பேசாமல் இருந்திருக்கிறாரா என்று சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. ஆங்கில மோகம் என்பது முழுத்தமிழகத்தையும் பாதித்திருக்கும் ஒன்றல்ல. பெரும்பான்மையானவர்களுக்கு அதை அடைகின்ற வசதியில்லை. கல்வி இருக்க வேண்டிய இடத்தில் இருந்திருந்தால் வாசிக்கும் பழக்கமும், நூல் விற்பனையும் வளர்ந்திருக்கும். நான் பிரயாணம் செய்கிறபோது விமானத்தில் அநேகர் தடித்த நூல்களை வாசித்துக்கொண்டிருப்பதைக் கவனித்திருக்கிறேன். பத்துப்பதினொரு மணிநேரப் பிரயாணத்திலும் அவர்கள் வாசிக்கிறார்கள் என்றால் வீட்டில் எந்தளவுக்கு வாசிக்கிறவர்களாக இருப்பார்கள் என்று சிந்திக்க வேண்டும். இளமையில் வாசிக்கும் கலையை அவர்களுடைய கல்வி அவர்களுக்குத் தந்திருப்பதால் வாசிப்பு அவர்களுக்கு இயல்பாக வருகிறது. அவர்களோடு இணைந்ததொன்றாக இருக்கிறது. வாசிப்பதையும், எழுதுவதையும் அடிப்படை அம்சங்களாகக் கருதும் கல்வி அமைப்பு நமக்கு முதலில் தேவை. அது அமையும்போது வாசிப்பும், நூல்வளர்ச்சியும் தன்னால் ஏற்படும்.

இனி வாசிப்பின் அவசியத்திற்கான காரணங்களை அவதானிப்போம்.